# *16*

# "வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்"

## (5:7-14)

*மூன்றாவது முறையாக அதிகாரம் 4 லிருந்து 6 வரைக்கும், பவுல் குறிப்பிட்ட வகையில் "நடந்து கொள்ளும்படி" பவுல் 5:7-14ல் அறிவுறுத்துகிறார். அன்பிலே நடந்து கொள்வதே கிறிஸ்தவ நடக்கை என்பதைச் சொல்லி முடிவுரை கொடுத்தார், அடுத்த பிரிவையும் அது அறிமுகப்படுத்தப்படுகிறது. எபேசியர்களின் கடந்த கால வாழ்வு முறையிலிருந்து கிறிஸ்தவம் முரண்பட்டது என்பதையும், அவர்களுக்கு அவர் அறைகூவலாக இருளிலிருந்து திரும்பி வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடந்து கொள்ளச் சொல்லுகிறார்.*

### வெளிச்சத்தின் கனியைக் கொடுத்தல் *(5:7-10)*

***[7]அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள். [8]முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள். [9]ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். [10]கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று சோதித்துப்பாருங்கள்.***

**வசனம் *7*.** இந்த வசனம், ஆங்கிலத்தில் **ஆகையால்** என்ற தொடர்பு வார்த்தையைக் கொண்டு தொடங்குவதால், இதற்கு முன்பு சொல்லப்பட்ட கருத்தோடு சேர்ந்ததாக சொல்லப்படுகிறது என்பது தெளிவாகிறது. ஆகிலும், NASBஐ மொழிபெயர்த்தவர்கள் அத்துடன் ஒரு புது வாக்கியத்தை துவங்கினார்கள், அந்த வாக்கியம் வசனம் 10 வரை தொடருகிறது. பாலுறவு பாவங்களில் ஈடுபடுவோர்மீது தேவனுடைய கோபாக்கினை ஊற்றப் பட்டிருப்பதால், பவுல் எபேசியர்களுக்கு நினைப்பூட்டி, அவர்கள் யாராக இருந்தார்கள் என்று நினைக்கும்படி குறிப்பிட்டார். மற்றவர்களிடத்தில் அன்பு செலுத்துவதன் மூலம் தேவனையும் கிறிஸ்துவையும் பின்பற்றுகிறவர்களாக வேண்டும் என்று குறிப்பிட்டார். இந்த போதனைகள் **அவர்களுக்கு பங்காளிகளாதிருங்கள் என்று சொன்னதைத் தொடர்ந்து வந்தவை.**

> எபேசியரின் இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ளவை புறஜாதி உலகத்தின் எல்லா விஷயத்திலும் பொதுவாக ஒதுங்கியிருப்பதைக் குறிப்பிடுவதில்லை ஆனால் குறிப்பாக அவர்களுடைய ஒழுக்கங்கெட்ட காரியங்களிலிருந்தே ஒருவர் பிரிந்திருக்க வேண்டியதைக் குறிப்பிடுவது தெளிவாகிறது. வாசகர்கள் கீழ்ப்படியாத புறஜாதிகளுடைய பாவச்செயல்

*களிலும் அதினிமித்தம் அவர்களுக்கு வரும் நியாயத் தீர்ப்பிலும் பங்காளிகளாயிருக்க வேண்டாம் என்று சொல்லப்பட்டனர்.[1]*

***வசனம் 8.*** *புறஜாதிகளின் பாவங்களுக்கு பங்காளிகளாக இருக்க மறுக்க வேண்டியதை நேர்மறை காரணத்தைச் கொண்டு வசனம் பேசுகிறது:* ***முதற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்.*** *கிறிஸ்தவர்கள் தேவனுடைய பிள்ளைகளாய் மாறுவதற்கு முன்பாக அவர்கள் ஏதோ சில வித்தியாசங்களையுடையவர்களாயிருந்திருக்கிறார்கள். அவர்கள் முற்காலங்களில் இருந்த நிலைக்கும் கிறிஸ்துவுக்குள் வந்த பிறகு உள்ள நிலைக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை இந்த நிருபத்தில் ஏற்கனவே விவரிக்கப்பட்டது (காண்க 2:1-22). வெளிச்சத்துக்கும் (பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட பின்பு அனுபவிக்கிற தேவனுக்குரிய வாழ்க்கை) இருளுக்கும் (சாத்தானுக்குரிய வாழ்க்கையும் பாவத்தின் விளைவால் ஏற்படுகிற மரணமும்) உள்ள முரண்பாட்டை பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அடிக்கடி காணமுடியும்.[2] வெளிச்சமும் இருளும் மனமாற்ற நிகழ்வுகளில் முரண்படுகிறது (கொலொசெயர் 1:12, 13; 1 பேதுரு 2:9). எபேசியரில் இருள் அறியாமையையும் (4:18) ஒழுக்கக் கேடான காரியங்களையும் குறிப்பிடுகிறது (5:3-14), அதே வேளையில் வெளிச்சம் சத்தியத்தையும் அறிவையும் குறிக்கிறது (காண்க 1:18), மற்றும் தேவனுக்குப் பிரியமானதைக் குறிப்பிடுகிறது (5:10).*

*எபேசியர்கள்* வெளிச்சத்தில் *இருந்தார்கள் என்று பவுல் குறிப்பிடவில்லை, மாறாக அவர்களே வெளிச்சமாயிருந்ததாகக் குறிப்பிட்டார். ஒரு காலத்தில் அவர்கள் இருளாயிருந்தார்கள், ஆகிலும் அப்போஸ்தலன், "… இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்று சொன்னார். "கர்த்தருக்குள்" அல்லது "கிறிஸ்துவுக்குள்" என்பது அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருந்தபடியால், அவர்களுடைய மனமாற்றப்பட்ட நிலையைப் பேசுகிறார் (ரோமர் 6:3; கலாத்தியர் 3:27). கிறிஸ்துவுக்குள் அவர்கள் பெற்ற மாற்றத்திற்குத் தக்கவாறு நடந்து கொள்ளும்படி பவுல் அவர்களை அறிவுறுத்தினார், அதாவது, "வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளும்படி" குறிப்பிட்டார். விசுவாசமில்லாதவர்கள் கீழ்ப்படியாதவர்கள் என்கிற அடையாளத்தை மிக அதிகமாய் வெளிப்படுத்துகிறபடியால் அவர்கள் "கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்" எனப்பட்டனர் (5:6), ஆகையால் எபேசியர்கள் "வெளிச்சத்தின் பிள்ளைகள்" என்று வெளிச்சத்துடன் அடையாளப்படுத்திப் பேசப்பட்டனர்.*

***வசனம் 9.*** *"வெளிச்சத்தின் பிள்ளைகளாய்" நடப்பது என்றால் என்ன என்று தொடர்ந்து விளக்கப்படுத்திய பவுல் இப்படியாக எழுதினார்,* ***(ஆவியின் [வெளிச்சத்தின்] கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்).*** *இந்த இடைப்பிறவரலான வாக்கியம் வெளிச்சத்தை வளம் பொருந்திய நிலத்தை அல்லது செழிப்பான ஒரு மரத்தை ஒப்பிட்டு, அதிலே அது கொடுக்கிற "கனிகளைக்" குறிப்பிடுகிறது. வெளிச்சத்தின் (ஆவியின்) கனி, "கனியற்ற அந்தகார கிரியைகளுக்கு" முரண்பட்டதாய் நிற்கிறது (5:11), "நன்மையானவைகளையும்"* (agathōsunē)*, குறிப்பாக ஒழுக்கமான "நன்மைகளையும்" உட்படுத்தும் பொருளில் பேசுகிறது.[3] இந்தக் கருத்து 2:10ன் பிரதிபலிப்பு, அங்கே பவுல், "ஏனெனில் நற்கிரியைகளைச்*

செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக ஆயத்தம் பண்ணியிருக்கிறார்," என்று சொன்னார். "நற்குணம்" என்பது ஆவியின் கனிகளில் ஒன்று (கலாத்தியர் 5:22) மற்றும் இது கிறிஸ்தவன் தன் பிற மக்களோடு கொண்டுள்ள நட்புறவில் செயலாற்ற பவுல் விவரித்துக் காட்டும் புதிய ஏற்பாட்டு வசனம் இது மட்டுமே. (பிறபயன்பாடுகளுக்கு, காண்க ரோமர் 15:14; 2 தெசலோனிக்கேயர் 1:11.)

"நீதியிலும்" (*dikaiosunē*) என்பது தேவனுடைய காரியத்திலும் மனுஷருடைய விஷயத்திலும் சரியானதை தேவனுடைய அளவீட்டின்படி செய்வது. "சத்தியம்" (*alētheia*) என்பது "நேர்மை," அது "பொய்க்கு எதிரானது."[4] என்றும் "சத்தியமும்" தேவனுடைய வசனம் என்றாகிறது (யோவான் 17:17). பவுல் எபேசியர்களை "அன்புடன் சத்தியத்தைப் பேச வேண்டும் (கைக்கொள்ள வேண்டும்)" என்றும் "அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக் கடவன்" என்றும் பவுல் பேசின போது இந்த இரண்டு கருத்துக்களையும் வலியுறுத்தினார் (4:15, 25). "இந்த மூன்று ஒழுக்கங்களில் ஒவ்வொன்றும் [5:9 ல் சொல்லப்பட்டுள்ளபடி] அவைகளின் ஸ்தானம் பொதுவானதும். கிறிஸ்தவ வாழ்க்கையில் முழுமையாய் நிற்கும் என்பதும் உண்மையானது."[5]

**வசனம் 10. கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று சோதித்துப் பார்த்து** என்பது "வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்வது" என்பதற்கு மேலும் கொடுக்கப்படும் விளக்கம் என்று புரிந்து கொள்ளக் கூடும். பவுல் பின்னர் சொன்னார், "கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்" (5:17). "சோதித்துப் பார்த்து" (*dokimazontes*) என்பது "பரிசோதித்தல், நிருபித்தல், பகுத்துப் பார்த்தல், வேறுபடுத்திக் காணுதல்" என்று சரியாக அர்த்தப்படுகிறது.[6] தேவனுக்குப் பிரியமானது எது என்பதை சோதித்துப்பார்ப்பது அல்லது நிருபிப்பதற்கும் அவருடைய சித்தத்தைப் புரிந்து கொள்வதற்கும் ஒரு அளவீடு தேவைப்படுகிறது. அந்த அளவீடு தேவனுடைய வசனமே. கொலோசெயர் 1:9, 10ல் கிறிஸ்தவர்கள் தேவனுடைய சித்தத்தை அறிகின்ற அறிவையடையவும், அதை புரிந்து கொள்ளும் ஞானத்தைப் பெற்றுக் கொள்ளவும், தேவனைப் பிரியப்படுத்தும் வாழ்க்கையை வாழவும் பவுல் ஜெபித்தார். முதலாவது, அறிவு இருந்தது; இரண்டாவது, புரிந்து கொள்ளுதல் இருந்தது; மற்றும் மூன்றாவது, தேவனைப் பிரியப்படுத்துதல் இருந்தது. பவுல் பிலிப்பியர்களை உற்சாகப்படுத்தி "நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள்," என்று சொன்னார் (பிலிப்பியர் 1:27), அதாவது தேவனுடைய வசனத்தின் அளவுகோலின்படி கற்று வாழ அறிவுறுத்தினார்.

அப்போஸ்தலனாகிய யோவான் தனது வாசகர்கள் "... ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று" சோதித்தறியும்படி சொன்னார் (1 யோவான் 4:1). இந்த சோதனை ஒரு அளவு கோலை வெளிப்படுத்துகிறது. அந்த அளவு கோல்தான் தேவனுடைய வெளிப்பாடு. தன்னுடைய ஒவ்வொரு சிந்தனைக் கருத்துக்களையும், ஒவ்வொரு வார்த்தையையும், தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தின்படியான ஒவ்வொரு செயலையும் ஒரு நபர் சோதித்து அறிந்தால், பிறகு - அதற்குப் பிறகு மட்டுமே - தேவனுக்குப் பிரியமாயிருப்பது என்ன என்று அவர் அறிந்து கொள்ளக் கூடும். பூர்வாங்க யூதர்கள் தேவனுடைய சித்தத்தை அறிந்திருந்தார்கள் என்று பவுல் சொன்னார்

*ஏனெனில் அவர்கள் நியாயப் பிரமாணத்திலிருந்து போதிக்கப்பட்டிருந்தார்கள் (ரோமர் 2:18). ஒருவர் தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தை அறியும் போது, தேவனைப் பிரியப்படுத்துவது இன்னது என்று அவருக்குத் தெரியும். அவர் தனது வாழ்க்கைச் சூழ்நிலைகளுக்கு வசனத்தின் அளவு கோலைக் கொண்டு பொறுப்பேற்பதால், அவர் தேவனைப் பிரியப்படுத்துகிறார் என்று அவருக்குத் தெரியும். 10 வது வசனப் பகுதியில், நற்குணத்திலும், நீதியிலும், உண்மையிலும் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் வாழ்தல் என்பது கர்த்தருக்கு பிரியமானது எவை என்று அறிவதும், உண்மையில் அவரைப் பிரியப்படுத்தத் தேவையானவைகளை செய்வதுமாகும்.*

## அந்தகார கிரியைகளை புறந்தள்ளுவதும் வெளியரங்கமாக்குவதும் (5:11-13)

**[11]கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள். [12]அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே. [13]அவைகளெல்லாம் கடிந்து கொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாக்குகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது.**

***வசனங்கள் 11, 12.*** *நீதிக்கும் தீமையான வாழ்க்கைமுறைக்கும் உள்ள வித்தியாசத்தின் மேல் கவனம் குவித்து, பவுல் கிறிஸ்தவர்களுக்கு அறிவுறுத்தி* **அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள் என்று சொன்னார்** *(5:11). தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், நாமே வெளிச்சமாயிருக்கிறோம், வெளிச்சத்தின் பிள்ளைகளாக வாழ்கிறோம், வெளிச்சத்தின் கனிகளைக் கொடுக்கிறோம் (5:8, 9). இதற்கு முரணாக, அவரை அறியாதவர்கள் அந்தகாரமாயிருக்கிறார்கள் (5:8), கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாயிருக்கிறார்கள் (5:6), மற்றும் "கனியற்ற அந்தகார கிரியைகளை நடப்பிக்கிறவர்களாக" வருணிக்கப்படுகிறார்கள்.*

*"வெளிச்சத்தின் பிள்ளைகள்" அந்தகாரக் கிரியைகளில் பங்கு பெறக் கூடாது, மாறாக செயல் வடிவத்தில் அவைகளை "கடிந்து கொள்ள வேண்டும்." "கடிந்து கொள்ளுதல்" என்று இங்கே சொல்லப்படுவது elenchō, என்ற வார்த்தையிலிருந்து பல்வேறு அர்த்தங்கொடுக்கும் முகங்களை கொண்டதாக மொழிபெயர்க்கப்படுகிறது, அவைகளின் பொருள், "குற்றவாளியாக தீர்க்க" "கண்டிக்க" "சிட்சிக்க" போன்றவை.[7] 5:11-13, ல் வெளியாக்கப்படும் அந்தகார கிரியைகளே அவர்கள் யாரென்று காட்டுகிறது என வலியுறுத்துவதுதான். கிறிஸ்தவன் அந்தகாரத்தை பொருத்துக் கொள்ளும் மனப்பாங்கு உடையவனல்ல; செயல்பூர்வமாக அவன் அதை எதிர்க்கக் கூடியவனாயிருக்கிறான். இந்த வார்த்தை சக கிறிஸ்தவர்களை அறிவுறுத்துவது போல புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது (1 தீமோத்தேயு 5:20; தீத்து 1:9, 13), எனினும் இந்த வசனப்பகுதி இரட்சிக்கப்படாதவர்களை - அந்த காரத்திற்குரியவர்களாகப் பேசுகிறது.*

*"அவைகளை கடிந்து கொள்ளுங்கள்" என்பதன் கிரேக்கச் சொற்றொடர் ஒரு பலமான அறிவுரையைக் கொடுக்கிறது. அது கிறிஸ்தவர்கள் அந்தகார*

*கிரியைகளுக்கு உடன்படக்கூடாது என்பதை பிரகடனப்படுத்துகிறது, ஆனால் அந்தகார கிரியைகளை வார்த்தையாலும் செய்கையாலும் வெளியரங்கமாக கடிந்து கொள்ளும்படி சொல்லப்படுகிறது. சில விரிவுரையாளர்கள் அந்தகாரக் கிரியைகளை வெளியரங்கமாக்குவது என்பது கிறிஸ்தவன் தனது வாழ்க்கை முறையால் மாத்திரமே காட்டுவது என நினைக்கிறார்கள். அவர்களின் கருத்துக்கு அடிப்படையாக வசனம் 12ன் வார்த்தைகளை எடுத்துக்கொள்ளுகிறார்கள்:* ***அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்குமே.***[8] *ஆகிலும், elenchō என்ற வார்த்தை பவுலால் பயன்படுத்தப்பட்டுள்ள விதம் வாயின் வார்த்தைகளைப் பேசி கடிந்து கொள்வதையே மற்ற இடங்களில் குறிப்பிட்டுக் காட்டுகிறது (காண்க 2 தீமோத்தேயு 4:2; தீத்து 2:15).*

*"**சொல்லுகிறதும்**" என்பது ஒரு தொடர்ச்சியாகவோ அல்லது மறுபடியும் மறுபடியுமோ செய்வதைக் குறிக்கிறது. இருளின் பாவங்களைப் பற்றி தங்களுக்குள்ளாகவோ அல்லது அவிசுவாசிகளின் முன்பாகவோ கிறிஸ்தவர்கள் பேசக்கூடியவைகள் அல்ல. இருப்பினும், கிறிஸ்தவர்கள் அப்படிப்பட்ட நடத்தைகளைக் குறித்து எதிர்த்துப் பேச முடியும், பேச வேண்டும். இன்றைய கலாச்சாரத்தில் கிறிஸ்தவர்கள் அந்தகாரப் பாவங்களில் பிரவேசிக்கக் கூடாதவர்கள் தொடர்ந்து தங்கள் சக கிறிஸ்தவர்களோடு காரியங்கள் எவ்வளவு மோசமானவை என பேசக் கூடாதவர்கள்; ஆகிலும் ஒழுக்கந்தவறிய முறை கேடுகளையும், புரட்டுப் பேச்சுக்களையும், கருச்சிதைவு, மற்றும் வேறே பாவங்களையும் எதிர்த்து பேசத்தான் வேண்டும். நிச்சயமாக, ஒரு கிறிஸ்தவன் அந்தகாரத்திற்கு முரணான மற்றும் அந்தகாரத்தைக் கடிந்து கொள்ளும் ஒரு வாழ்க்கை முறையை வாழவேண்டும். ஆனால் அந்தகாரகிரியைகளுக்கு எதிராகப் பேசவேண்டிய காலம் மற்றும் இடம் ஒன்றும் இருக்கிறது. நீதியுள்ள வாழ்க்கையின் பெலனை அதிகமாக வலியுறுத்திக் கூற முடியாது. ஆனால் வசனத்தின் வல்லமை இருளின் கிரியைகளை கடிந்து கொள்ளுகிறது (காண்க ரோமர் 1:18-32).* S. D. F. Salmond *ஆராய்ந்து பார்த்ததிலிருந்து,*

> ஏன் வெளியரங்கமான கடிந்து கொள்ளுதல் தேவைப்பட்டது என்பதற்கு *இரகசியமாக* செய்யப்படும் கிரியைகளே காரணமாக இருக்கிறது; கருத்து என்னவெனில் இதுதான் - ஒளிப்பிடத்தில் செய்யப்படும் அஞ்ஞானிகளின் செயல்கள் மிகவும் அருவெறுக்கத்தக்க வகையில் சொல்வதற்கு கூட இயலாதவைகளாயிருக்கிறது; இதற்கான தேவையெல்லாம் அமைதியான மேலோட்டமாய் எடுத்துக் கொள்வதைப் பார்க்கிலும் வெளிப்படையாய் கடிந்து கொள்வதே ...[9]

***வசனம் 13.*** *இருள் மறைப்பதை வெளிச்சம் வெளிப்படுத்துகிறது. வெளிச்சம் வீசும் இடத்தில்,* ***எல்லாம் வெளியரங்கமாகும்.*** *அந்தகாரக் கிரியைகள்* ***வெளிச்சத்தினாலே வெளிப்படும்போது,*** *பிறகு* ***வெளியரங்கமாகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கும்.*** *அந்தகாரக் கிரியைகளின் தீமையான இயல்பை கிறிஸ்தவர்கள் கடிந்து கொள்ளும்போது, அவர்கள் அந்தகாரத்தில் இருப்பவர்கள் "வெளிச்சமாக" மாறும்படி சந்தர்ப்பம் அளிக்கிறார்கள். இயேசு சொன்னார்,*

*ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தி யத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார் (யோவான் 3:19-21).*

அவர் சத்தியத்தை ஒளியாகவும் தீமையை இருளாகவும் பேசினார். ஜனங்கள் அந்தகாரத்தின் தீமைகளை நேசித்து வெளிச்சத்தை பகைக்கும்போது, நியாயத்தீர்ப்புக்கு கொண்டு செல்லும் அந்தகாரத்தில் அவர்கள் தொடர்ந்து நீடிக்கிறார்கள். சத்தியத்தின் நன்மையான காரியங்களை நேசிக்கிறவர்கள் “வெளிச்சத்தினிடத்தில்” வருகிறார்கள் மற்றும் அவர்களுடைய கிரியைகளெல் லாம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று உறுதியளிக்கப்படுகிறார்கள்.

## கவனமுடன் நிலைத்திருத்தல் (5:14)

**[14]ஆதலால் தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னை பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்.**

***வசனம் 14.*** இந்தப் பகுதியை “வெளிச்சத்தின் பிள்ளைகளைக்” குறித்து மூன்று வரிகளால் பாடல் வடிவில் பவுல் நிறைவு செய்கிறார். ***“தூங்குகிற நீ விழித்தெழு, மரித்தோரை விட்டு எழுந்திரு அப்பொழுது கிறிஸ்து உன்னை பிரகாசிப்பிப்பார்.”*** இந்தப் பாடலை **ஆதலால்** (இந்தக் காரணத்தினால்) என்று சொல்லி துவங்குகிறார், இது 4:8ம் வசனத்துக்கு முன்பு பயன்படுத்தினதற்கு சமமானது. ஆகிலும், இந்த வரிகள் வேதாகமத்தில் வேறெங்கும் காணப்படுவதில்லை. பழைய ஏற்பாட்டில் இதற்கு ஒப்பான வசனம் ஏசாயா 60:1 ல் சொல்லப்படுகிறது; ஆனால், அங்கே, தேவன் தமது ஜனங்களுக்கு வெளிச்சத்தைக் கொண்டு வந்தமைக்காக துதிகளைச் செலுத்துகிறார், இந்தப் பாடலை பவுல் தனது வாசகர்களுக்கு ஒரு சவாலாக மற்றும் வாக்குத்தத்தமாக முன் வைக்கிறார்.

சில விளக்கவுரையாளர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பழைய ஏற்பாட்டு வசனங்களின் பொழிப்புரையை பவுல் எழுதினார் என்று கருதுகின்றனர். மேற்கோள் காட்டுவதற்காக அப்படி உரிமை எடுத்துக் கொள்வது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு இது வழக்கத்துக்கு மாறானதல்ல, அப்படிப்பட்ட சொற்றொடர்களுக்கு பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடுமாகிய இரண்டுமே பின்னணிகளைக் கொடுக்கிறது. வெளிச்சம் என்பது தேவன் வந்து தமது ஜனங்களுக்குச் செய்கிற ஊழியத்தைக் குறிக்கிறது (காண்க உபாகமம் 33:2; சங்கீதம் 50:2; 80:1-3, 7, 19), மேலும் கிறிஸ்து பெரும்பாலான இடங்களில் ஒளியாக சித்தரிக்கப்படுகிறார் (காண்க லூக்கா 2:32; யோவான் 1:4-9; 3:19-21; 8:12; 9:5; 12:46; வெளிப்படுத்தின விசேஷம் 1:16).

வேறுசிலர் பவுல் ஏவப்படாத மூலக்கூறிலிருந்து மேற்கோள்

காட்டியுள்ளதாக நினைக்கின்றனர் (நடபடிகள் 17:28ல் உள்ளது போல), தள்ளும்படி ஆகமத்திலிருந்து, ஒருவேளை ஆதி கிறிஸ்தவப் பாடல் களிலிலிருந்து, அல்லது பதிவு செய்யப்படாத இயேசுவின் வாக்கியங் களிலிருந்து, என்று நினைக்கின்றனர்.[10] பாடலின் மூலக்கூறை நாம் நிச்சயமாக அறியாதபடியினால், பவுல் இதைப்பயன்படுத்தியுள்ள விதம் தெளிவானது, கிறிஸ்துவின் செய்தியை ஆர்வமாய் ஏற்றுக் கொண்டவர்கள், அவர்கள் ஆவிக்குரிய மரணத் துயிலில் இருந்தபோதிலும், அவர்களுக்கு உயிர்த்தெழுதல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது. கிறிஸ்துவின் ஜீவனும் வெளிச்சமும் (காண்க யோவான் 8:12; ரோமர் 6:1-4) தங்களுடைய அந்தகாரக் கிரியைகளை விட்டுத்திரும்புகிறவர்களுக்குக் காத்திருக்கிறது மற்றும் அவர்கள் "வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுபவர்களுடன் சேர்ந்து கொள்ளுவார்கள்" (5:8).

> சபையானது மூலத் தன்மையில் சமுதாயத்தின் மதிப்பீட்டால் காட்டும் எதிர்ப்புக்குப் போட்டியாக இருளை எதிர்த்து தனது ஜீவிக்க வேண்டிய ஒன்று என்பதை தனது வாசகர்கள் உணர வேண்டுமென பவுல் விரும்பினார். … சுற்றிச் சுழ்ந்துள்ள அந்தகாரத்தால் விசுவாசிகள் ஒழுக்கக்கேட்டில் சூழப்படுவதைக் காட்டிலும், தங்களுடைய செல்வாக்கை அவைகள்மேல் செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டனர். வாசகர்கள் ஒரு சமுதாயமாக, அவர்களுடைய நடத்தை பிரகாசிக்கிற கலங்கரை விளக்காயும், வாழ்க்கை வாழ வேண்டிய விதம் என்ன என்பதைக் காட்டுகிற ஒளியேற்றலாகவும் இருக்க வேண்டும். … அதினால் அந்தகாரத்தை வெளிச்சமாக்கும் சுற்றுச் சூழலாக மாறும். வெளிச்சத்துடன் போராடும் இருளால், முற்றிலும் ஜெயங்கொள்ள முடியாது, ஏனெனில் வெளிச்சம் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை அதன் மூலகாரணியாய் கொண்டிருக்கிறது.[11]

## கைக் கொள்ளுதல்

### வெளிச்சத்தின் பிள்ளைகள் (5:7-14)

5:7-14ல் பவுல், கிறிஸ்தவர்கள் எப்படி "நடந்து கொள்ள" வேண்டும் என மூன்றாவது அறிக்கையை கொடுக்கிறார், வசனம் 8ல் தனது வாசகர்களை "வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடந்து கொள்ளச் சொல்லுகிறார்."

*முரண்பாடு.* "வெளிச்சத்துக்கும்" "அந்தகாரத்துக்கும்" உள்ள முரண்பாட்டை வசனங்கள் முன் வைக்கின்றன. "வெளிச்சம்" தேவனை அடையாளப்படுத்துகிறது, தேவனுடைய வழியையும், அவருடைய வல்லமையையும், மற்றும் கிறிஸ்தவர்களையும் கூட அடையாளப்படுத்துகிறது. இருள் சாத்தானையும், உலக வழிகளையும், அவனுடைய வல்லமையையும், மற்றும் இழந்து போனவர்களையும் அடையாளப்படுத்துகிறது.[12] "வெளிச்சமும்" "இருளும்" கிறிஸ்துவையும் தீமையானவைகளையும் அடையாளப் படுத்துகின்றன (யோவான் 1:1-5, 9; 3:19-21; 8:12; 12:35, 36). தொடர்ந்து, "வெளிச்சத்தோடும்" "இருளோடும்" கொண்டுள்ள தொடர்பு விசுவாச முள்ள கிறிஸ்தவர்களுக்கும் விசுவாசமில்லாதவர்களுக்குமிடையேயான முரண்

*பாட்டை அடையாளப்படுத்துகிறது (1 யோவான் 2:4-11).*

*உறுதியளிப்பு.* வெளிச்சத்தில் நடப்பது என்பது கிறிஸ்தவனை தேவனோடு கூட முறையான நட்புறவை ஏற்படுத்தும் என்பதற்கான உறுதியையும் தொடர்ந்து பாவங்களிலிருந்து சுத்திகரிப்பையும் உறுதியளிக்கிறது (1 யோவான் 1:5-9).

*அறிவு.* கிறிஸ்தவர்கள் வெளிச்சத்தின் கனிகளை கொடுப்பதினால் அவர்கள் "வெளிச்சத்தில்" நடக்கிறார்கள் என்பதை அறிவார்கள் (5:9), தேவனுக்குப் பிரியமானவைகளை கண்டுபிடிப்பார்கள் (5:10), அந்தகாரக் கிரியைகளை கடிந்து கொள்வார்கள் (5:11-14). கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து அவருடைய பிள்ளைகளாய் வாழ்வதன் மூலம், அவர்கள் நற்குலகனிகளைக் கொடுக்கத்தக்க வகையில் ஆசீர்வதிக்கிறார். வசனங்களைக் கற்பதன் மூலம் தேவனைப் பிரியப்படுத்துவது இன்னதென்று அவர்கள் கண்டு பிடிக்கின்றனர். கிறிஸ்தவர்கள் சரியான வாழ்வை வாழ்ந்து உறுதியோடும் கனிவோடும் தீமையை எதிர்த்துப் பேசும்போது. அது சமுதாயத்தில் கொண்டு வரும் பிரதிபலிப்பு மகத்தானது.

*"கர்த்தருக்குள் வெளிச்சம்."* பவுல் எபேசியர்களை "கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்று பவுல் குறிப்பிட்டார் (5:8). ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும்போது, அவர் தேவனோடு ஒப்புரவாக்கப்படுகிறார், பாவத்திலிருந்து மீட்கப்படுகிறார், சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பெறுகிறவராகிறார்; உலகத்துக்கு வெளிச்சமாகிறார் (காண்க 1:3-14; 2:13-16; மத்தேயு 5:16).

*முடிவுரை.* கிறிஸ்தவர்கள் உலகத்தில் இருக்கிறார்கள். ஆனால் உலகத்தார்கள் அல்ல. சபை உலகத்தை தழுவிக்கொள்வதில்லை, ஆனால் இருளில் வெளிச்சம் ஊடுருவது போல உலகத்தை எதிர்த்து நிற்கிறது.

ஜெய் லோக்ஹார்ட்

**தேவனை பின்பற்றுகிறவர்கள் (5:1-14)**

உலகமனைத்திலும் உள்ள பிள்கைள் எல்லாரிடத்திலும் உள்ள ஒரு குணாதிசயம் என்னவெனில் அவர்கள் நேசிக்கிறவர்களை எப்பொழுதும் பின்பற்றுவார்கள். அம்மா தனது மகனைப் பார்த்து அவன் என்ன சாப்பிடுகிறான் என்று கேட்டால், மகன் சொல்லுவான், "அப்பா என்ன சாப்பிடுகிறாரோ அதுவே தனக்கும் வேண்டும்" என்று சொல்லுவான். பிள்ளைகள் எப்பொழுதும் தங்களுக்கென ஒரு தனி கொள்கையுடையோராயிருக்க மாட்டார்கள்; அவர்கள் மிக அதிகமாய் தங்களுக்கென ஒருவரை முன்மாதிரியாகக் கொள்ள விருப்பப்படுவர்.

தேவனுடைய பிள்ளைகளகிய நாம், "தேவனைப் பின்பற்றும்படி" சொல்லப்படுகிறோம் (5:1). நாம் தேவனைப் போல் இருக்க வேண்டுமானால், நாம் எப்படி வாழ வேண்டும்? 5:1-14 ல், பவுல், தேவனைப் பின்பற்றுகிறவர்கள் அவரைப் போல இரண்டு வகையில் இருப்பார்கள் என்றார்.

1. *அன்பின் பிள்ளைகளாயிருப்பார்கள்* (5:1-7). "ஆதலால் நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல ..." (5:1, 2).

*இந்த முதல் குணாதிசயத்தை புரிந்துகொள்ள உதவியாயிருக்கும் திறவுகோல் வார்த்தை "ஆதலால்." இந்த வார்த்தை முன்பு 4:32ல் சொல்லப்பட்ட கூற்றுக்கு நம்மை கொண்டு செல்லுகிறது: "ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." தேவன் அன்புடன் மன்னிக்கிறவராக இங்கே காட்டப்படுகிறார். நாம் தேவனைப் பின்பற்றுகிற விஷயத்தில் நாமே அன்பினால் மன்னிக்கக் கூடியவர்களாய் மாறும்போது பவுலின் கட்டளைகளை மிகச் சிறப்பாக நிறைவேற்றக் கூடியவர்களாகிறோம். நாம் அன்பாயிருக்க வேண்டியவர்கள்; நாம் இளகிய மனமுள்ளவர்களாயிருக்க வேண்டியவர்கள்; கடினமானவர்களாக அல்ல, மரத்துப் போனவர்களாக அல்ல, அலட்சிய மனப்பான்மையுடையவர்களாயுமல்ல. நாம் மன்னிக்கிறவர்களாயிருக்க வேண்டும். அதாவது அன்பு நிஜமாக்கப்படுகிறது. மன்னிக்காத அன்பு உண்மையிலேயே அன்பல்ல.*

*மத்தேயு 18ல் இந்தக் கோட்பாட்டைக் குறித்து இயேசுவின் சொந்த விளக்கத்தைக் காண்கிறோம். ஒருவன் தன் சகோதரனை எத்தனை முறை மன்னிக்க வேண்டும் என்று பேதுரு கர்த்தரிடத்தில் கேட்டார். யூத ரபீமார்கள் ஒருவர் மற்றொருவரை மூன்று முறை மட்டுமே மன்னிக்க வேண்டும் என்று போதித்தார்கள்; அதற்குப் பின்பு அவருக்கு கட்டுப்பாடு எதுவுமில்லை. பேதுரு அவருடைய போதனையால் எவ்வளவாய் தான் முதிர்வு அடைந்திருக்கிறார் என்று காண்பித்து கர்த்தருடைய மனதில் நன்மதிப்பைப் பெற ஏதுவாக, ஏழு தரமா என்று தனது கேள்விக்கு தானே பதில் சொல்லி வினவினார். இயேசு அவருக்கு மறுமொழியாக, "ஏழு தரமாத்திரமல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்." என்றார் (மத்தேயு 18:22). இதன் கருத்து எண்ணிக்கையை கணக்கு வைத்து மன்னிப்பதல்ல, ஆனால் மன்னிக்கிற மனோபாவமே. தேவனுடைய அன்பைப் பின்பற்றுவதற்கு அடிப்படைமன்னிக்கிற மனோபாவமே.*

*நாம் தேவனுக்கு தீங்கிழைத்தோமா? ஆமாம், செய்திருக்கிறோம்! அவருக்கு எதிராக கலகம் பண்ணியிருக்கிறோம், அவரைப் பரியாசம் பண்ணியிருக்கிறோம், அவரை பகைத்து வெறுத்திருக்கிறோம், புறக்கணித்திருக்கிறோம், இருந்தும், அவர் நம்மை மன்னித்திருக்கிறார். தகுதியில்லாத நம்மை தேவன் தமது பகுதியில் மன்னிப்பைக் கொடுத்தார் என்பதற்கு, தெளிவான ஆதாரமே சிலுவையிலே கிறிஸ்து மரித்தது தான் (ரோமர் 5:8). நாம் காட்ட வேண்டிய வகையான மன்னிப்பு அது தான்.*

*அப்படிப்பட்ட மன்னிப்பை அளிப்பது எது? அன்பே. அதிகாரம் 2ல் பவுல் போதித்தவைகளை நினைத்துக் கொள்ளுங்கள். நாம் பாவத்திலே மரித்தவர்களாயிருந்தோம் என்று அவர் சொன்னார்; நாம் இந்த உலகத்தின் வழக்கப்படியான வாழ்வுமுறையில் வாழ்ந்தோம் என்று சொன்னார். நாம் கீழ்ப்படியாதவர்களாயிருந்தோம்; நாம் நமது மாமிசம் விரும்பினவைகளைச் செய்தோம். "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார் ..." (2:4, 5).*

*சிலுவை மன்னிப்பிற்கு உண்மை வடிவம் கொடுத்தது, ஆனால்*

*தேவனுடைய அன்பு சிலுவைக்கு உண்மை வடிவம் கொடுத்தது. தேவன் உங்களை கிறிஸ்துவுக்குள் மன்னித்தது போல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் என்று பவுல் கொடுத்த அறிவுரையின் பின்னணி இதுவே, அதினால்தான் பவுல், "ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள் ... அன்பிலே நடந்து கொள்ளுங்கள்" என்று பரிந்துரைத்தார் (5:1, 2).*

*நமக்கு தீங்கு செய்த எவரையுமே மன்னிக்கத் தக்கதாக நம்முடைய அன்பிலே முன்னேறும்படி பவுல் அறைகூவல் விடுத்தார். அது கடினமானதே, ஏனெனில் மனப்புகைச்சலை நமக்குள்ளாக வைத்துக் கொண்டு, உள்ளுக்குள்ளாகவே புழுங்கிக் கொண்டிருப்பது மிகச் சுலபமானது. தேவனுடைய மன்னிக்கிற விருப்பமே நம்முடைய அளவீடு.*

*(1) பிரதி எடுப்பதற்கு ஒரு உதாரணம். நாம் அவரைப் போலிருக்க வேண்டுமானால், அறிவுரைக்கு மேல் நமக்கு சில காரியங்கள் நமக்குத் தேவை என தேவன் அறிவார்; அவரைப் பிரதியாகக் காட்ட நமக்கு ஒரு உதாரணம் தேவை. அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் அந்த உதாரணம் இயேசு கிறிஸ்துவே, அவர் மனித மாமிசத்தில் வந்த தேவன். தேவன் எப்படியிருப்பார் என்று அறிய வேண்டுமா? அப்படியானால் இயேசுவைப் பாருங்கள். அவர் "உங்கள் மீது அன்புகூர்ந்து. நமக்காக தம்மையே ஒப்புக்கொடுத்தார்." இதுதான் அன்பை உயிரோட்டமுள்ளதாக இயக்குகிறது: சுயத்துக்கு இல்லை என்று சொல்லிவிட்டு, பிறருக்காகத் தன்னை அற்பணம் செய்வது. உண்மையான அன்பை, நம்முடைய கர்த்தர் விளங்கப்பண்ணினார், அது சுய நலம் அற்றதும். ஒப்புக் கொடுத்தலும், தியாகப்பலியாக்குவதும், தாழ்மையும், சுயத்தை அப்பணிக்கிற மனவிருப்பம் கொண்டிருத்தலும் மற்றவர்களுடைய ஆசீர்வாதங்களுக்காக செயல்படுவதாகும்.*

*நிச்சயமாக, உலகம் ஒழுங்கு செய்துள்ளபடியான முன்மாதிரியான அன்பு அது அல்ல. உலகப் பிரகாரமான முன்மாதிரி இதுதான்: "நீங்கள் என்னுடைய தேவைகளை சந்திக்கிற வரைக்கும், நீங்கள் என்னோடே இருக்கலாம்." உலகப்பிரகாரமான அன்பு நமது தேவைகளின் அடிப்படையில் அமைந்தது. அது, "நான் உன்னை நேசிக்கிறேன், ஏனெனில் நான் உன்னை நேசிக்கும் அளவுக்கு நீ நல்லவனாக இருக்கிறாய்" என்று சொல்லவைக்கிறது; "நீ எனக்குள் நல்ல உணர்வை ஏற்படுத்துவதால் நான் உன்னை அன்பு செலுத்துகிறேன்"; பாதிக்கும்படியோ அல்லது எனது உணர்வுகளை புண்படுத்தும்படியோ "நீ எனக்கு எதுவும் செய்யாதபடியால் நான் உன்னை அன்புகூருகிறேன்," என்றெல்லாம் சொல்ல வைக்கும் உலக அன்பு.*

*தேவனுடைய அன்பு அப்படிப்பட்டதல்ல. தேவனுடைய அன்பின் வகை, "நீ என்னை மன வேதனைப்படச் செய்தாலும். என் சிநேகிதனே, நீ என்ன செய்தாலும் அதற்குப் பிரதிபலனாக என்னிடத்திலிருந்து அன்பை திரும்பி பெறுவாய்!" என்று சொல்லும். தேவனுக்கு, எந்தப் பொருளாலும் ஒருபோதும் அன்பு கட்டுப்படுத்தப்படுவதில்லை. அன்பு தேவனிடத்திலிருந்து வருகிறது ஏனெனில் அன்புகூருவது அவருடைய இயல்பு.*

*(2) கைவிட வேண்டிய தீமை. நாம் தேவனைப் பின்பற்றினவர்களாயிருக்க வேண்டுமானால், நேர்மையற்ற அன்பின் சில வகைகளைக் கைவிட வேண்டும் (5:3, 4).*

உலகம் பற்றிக் கொண்டுள்ள அன்பு புரட்டப்பட்ட ஒன்று. அது சுயத்தை மையமாகக் கொண்டது, இங்கே பவுல் விளக்கப்படுத்துகிற ஒவ்வொரு பாவமும் அப்படிப்பட்டது. உதாரணமாக, பாலுறவு ஒழுங்கீனங்கள் எல்லாவகைபாலுறவுப் பாவங்களையும் சுய இன்பத்துக்கான சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்கிறது. தன் மனைவிக்கு உண்மையாயிராத ஒரு கணவனைக் குறித்து நினைத்துப்பாருங்கள். அவன் அவளுக்கு சிறப்பாய் தோன்றுகிற ஆவலை சரியாக நிறைவேற்ற முடியாது. அவன் செய்வதெல்லாம் தனது சுய ஆசைகளையும் இச்சைகளையும் நிறைவேற்றிக் கொள்ள வகை தேடுகிறான். இயேசு நாம் பின்பற்றும்படி கொடுத்த அன்பின் முன்மாதிரி இதுவல்ல.

பவுல் கொடுத்த இந்த பட்டியல் வரிசையில் "பேராசை" என்பது தவறான இடத்தில் இருப்பதாக முதலில் காணப்படுகிறது. அதன் இயல்பில், அதுவும் கூட, புரட்டப்பட்ட அன்பின் ஒருவகையாக மாத்திரமே இருக்கிறது. பத்தாவது கட்டளை "பிறனுடைய வீட்டையும் ... பிறனுடைய மனைவியையும் இச்சியாதிருப்பாயாக" என்று சொல்லுகிறது (உபாகமம் 5:21). பாலுறவு பாவங்கள் இச்சித்தலையும், அல்லது ஆசையையும் உட்படுத்தியுள்ளது, இப்படிப்பட்ட உறவுகள் முறையற்ற செயல்களாகும். இவ்வகை செயல்களில், ஒரு நபர் தனது சுய விருப்பத்திற்காக செயல்படுவானேயன்றி, தன் அயலாரின் விருப்பத்தை நிறைவேற்ற விடாமல் இந்த பேராசை (இச்சை) கொண்டு செல்லுகிறது. இது ஒரு சுய - நேசத்தின் வடிவமாக இருக்கிறது, மற்றும் அதன் விளைவாக ஒரு நேர்மையற்ற அன்பாக இருக்கிறது. இந்த செய்கைகள் தேவனுடைய ஜனங்களுக்கு "தகாதவைகள்" என்று பவுல் சொன்னதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை (5:4).

நாம் அப்படிப்பட்ட காரியங்களை செய்யாமல் விலகியிருப்பதோடு மாத்திரமல்ல, ஆனால் நாம் அதன் பேர் முதலாய் நமக்குள் சொல்லவுங் கூடாது. நாம் வெறுப்பூட்டும் அப்படிப்பட்ட வார்த்தைகளை பேசக் கூடாதவர்கள். (இந்த வசனப் பகுதியில், பாலுணர்வை - அடிப்படையாகக் கொண்ட குறைகளையே விசேஷமாக சிந்திக்கிறோம்.) அல்லது நாம் வம்பு வார்த்தைகளிலோ, புத்தியீனமான பேச்சுகளிலோ தேவனுடைய மேன்மையானதும் அவருடைய ஜனங்களுக்குக் கொடுத்ததுமான அவருடைய அளவீடுகளை கேலியும் பரியாசமும் பண்ணுகிற பேச்சுக்களையோ நாம் பேசக் கூடாது. "மோசமான வேடிக்கை பேச்சுக்கள்" என்பது "மிகச்சுலபமாக மாறிவிடுகிற" எனும் பொருள்படும் கிரேக்கப் பதத்திலிருந்து வந்தது. சிலர் மிகச் சுலபமாக எதையாவது சொல்வதைக் கேட்டோ அல்லது செயலைக் கண்டோ அருவருப்பானதாக மாற்றிவிடுவார்கள். அப்படிப்பட்ட அனைத்து அசுத்தப் பேச்சுகளும் தேவனைப்பின்பற்றுகிற ஒருவரது வாழ்வை தடை செய்யும். தேவன் அன்பு காட்டுவதற்கு ஒப்பாக ஒரு நபர் அன்பு காட்ட இயலாது. மேலும் வெறுக்கத்தக்க வார்த்தைகளைப் பேசும் வாயை உடையவராயிருப்பின் அது தேவனுடைய நம்பிக்கையை குறைத்து மதிப்பதாகும்.

மாயத்தோற்றங் கொண்ட அன்பை உடையவர்களின் தொடர்வாழ்வைக் கொண்டவர்களுக்கு வசனங்கள் வன்மையான எச்சரிக்கையைக் கொடுக்கிறது:

*விபச்சாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே.*

*இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுக்கு பங்காளிகளாகாதிருங்கள் (5:5-7).*

"நீ எதையெல்லாம் விரும்புகிறாயோ அவைகளையெல்லாம் அனுபவிக்க உனக்கு உரிமையுண்டு! திருமணத்துக்கு முந்தைய பாலுறவு சரியே," என்று நமது உலகம் நமக்குச் சொல்லுகிறது. அப்படிப்பட்ட நம்பிக்கைகளை கொண்டுள்ள ஜனங்கள் தங்களுடைய சுய சரீரத்தின் இன்பங்களை மட்டுமே அனுபவிப்பதில் விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்கள். உலகத் தத்துவங்களால் மோசம் போவதை எதிர்த்து பவுல் எச்சரித்தார். கட்டுப்பாடில்லாத விடுதலையையும் சுதந்திர வாழ்வையும் குறித்து உலகத்து மக்கள் பேசுகிறார்கள், ஆனால் அப்படிப்பட்ட சிந்தனைகள் அனைத்தும் தற்புகழ்ச்சியாக இருக்கிறது. பவுல் சொல்லுவதெல்லாம், "இப்படிப்பட்ட வார்த்தைகளை நம்பாதேயுங்கள். தேவனுடைய கோபாக்கினை மாயத்தோற்றமான அன்பிலே வாழ்பவர்கள் மேல் கடைசியிலே வரும் - தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லித்திரிவோர் மீதும் வரும். தொடர்ந்து தெய்வீக அன்பின் மாதிரியிலே இயேசு உங்களுக்கு காட்டியுள்ளபடி நடவுங்கள்."

2. *வெளிச்சத்தின் பிள்ளைகள்* (5:8-14). "முதற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் ... கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்" (5:8-10). வெளிச்சம் சத்தியத்தின் அடையாளம். ஒரு காலத்தில் வெளிச்சத்தில் இல்லாதவைகளெல்லாம் நம்முடைய வாழ்க்கையில் இருந்தது (5:8). நாம் ஆவிக்குரிய அந்தகாரத்தில் நடந்தோம். தேவன் முன் வகிக்கிற அனைத்து காரியங்களுக்கும் எதிராக செயல்பட்டோம். இப்பொழுது, இயேசுவைப் பின்பற்றுவதன் மூலம், நமது கண்கள் நமக்கு திறக்கப்பட்டது; நாம் சத்தியத்தில் நடக்கிறோம். நாம் தவறான மதிப்புகளையும் சத்துவங்களையும் கண்டறிந்து அவைகள் திருமணங்களையும், உறவுமுறைகளையும், பணிகளையும் நொறுக்கி நிர்மூலமாக்குபவை என்பதையும் நாம் காணமுடியும். இனியும் நாம், "இப்படிச் செய்வதில் நான் எந்தத் தவறையும் காணவில்லை," என்று சொல்லுவதில்லை, ஏனெனில் நமது கண்கள் பாவங்களைப் பாவங்களாகக் காண்கின்றன.

(1) நமது குணாதிசயங்கள் (5:9). இருளிலிருந்து ஒளியினிடத்துக்கு இப்போது மாற்றம் பெற்றுள்ள நமது வாழ்க்கையில் மூன்று குணாதிசயங்கள் அடையாளம் காட்டுகின்றன. முதலாவது "நற்குணம்." விரோதமான செய்கைகளுக்குப் பதிலாக (4:31), நமது வாழ்க்கை இப்பொழுது தருமச் செயல்களால் நிரப்பப்பட்டிருக்கிறது. தேவைகளை நாம் தேடி கண்டுபிடித்து மற்றவர்களுடைய வாழ்க்கையிலே அவைகளை நிறைவு செய்கிறோம். இரண்டாவதாக, "வெளிச்சத்தின் பிள்ளைகள்" "நீதியினாலும்"

அடையாளப்படுத்தப்படுகின்றனர். எது சரியானதோ (நீதியுள்ளவைகளோ) அவைகளை நாம் செய்கிறோம் ஏனென்றால் அப்படிச் செய்வது தேவனை மகிமைப்படுத்துகிறது. இப்பொழுது நாம் தேவன் பார்க்கும் விதமாகவே பார்க்கிறோம், அவர் தீர்ப்புச் செய்யும் வண்ணமாக நாமும் தீர்ப்புச் செய்கிறோம், அவர் நாம் வாழ விரும்புகிறபடி நாமும் வாழ்கிறோம், வெளிச்சத்தின் மூன்றாவது கனி "சத்தியம்." நமது பழைய வாழ்க்கையில் மாய்மாலமும் பொய்யும் கொண்டவையாக இருந்த ஒன்று. இப்பொழுது, நாம் நேர்மையும், நம்பகத்தன்மை மிக்கதும், கனமும், உண்மையுமுள்ள வாழ்க்கையை வாழ வேண்டியவர்கள்.

நீதியுள்ள கிரியைகளை செய்வதனால் மட்டும் நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாவதில்லை. அது அப்படியே அதற்கு எதிர்மாறானது. சிலர் தவறான எண்ணங்கொண்டு அவர்கள் போதிய நற்காரியங்களை நடப்பித்தால் அவர்கள் இரட்சிக்கப்பட முடியும் என்று நம்புகிறார்கள். உண்மையென்னவெனில் நாம் முதலாவதாக வெளிச்சத்தின் பிள்ளைகளாக மாறி பின்பு நற்கிரியைகளுக்கான கனிகளை கொண்டு வருகிறவர்களாகிறோம், அப்பொழுது நீதியின் கனிகளையும் சத்தியத்தின் கனிகளையும் கொடுக்கிறவர்களாகிறோம். இவைகள் இரட்சிக்கப்பட்டிருப்பதன் விளைவேயன்றி, காரணியல்ல.

(2) நமக்கான கட்டளை. "கனியற்ற அந்தகார கிரியைகளுக்கு உடன்படாதிருங்கள்" (5:11). பவுல் இரண்டுமுறை, கனியற்ற கிரியைகளைக் குறிப்பிடுகிறார், அவைகளை கிறிஸ்தவர்கள் தவிர்க்க வேண்டியவர்கள் (4:17-31; 5:3, 4). அந்தகாரத்தில் இருப்போருடன் நாம் எவ்வித ஐக்கியமும் கொண்டிருக்கக் கூடாதவர்கள்.

அப்படிப்பட்ட கிரியைகளை நாம் தவிர்க்க வேண்டியதன் காரணம் அவைகள் "கனியற்றவை." பவுல் வித்தியாசப்படுத்திக் காட்டுவது ஒரு கனிக்கும் மற்றொரு வகையான கனிக்கும் உள்ள வேறுபாடுகளையல்ல. கனிக்கும் கனியில்லாமைக்கும் உள்ள வேறுபாடுகள்தான் அவை. பழைய வாழ்க்கையின் கிரியைகள் தரிசு நிலத்தைப் போலவும் பயனற்றதாகவுமிருந்தது. அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்வதிலே. எந்தவித சமாதானமும் திருப்தியும் இல்லை. கனியற்ற கிரியைகள் நமது திறமைகளுக்கேற்ற வாழ்வை வாழ உதவி செய்யவில்லை. பாவக்கிரியைகள் அதிகமான வாக்குறுதிகளை வாரி வழங்குவது போன்ற தோற்றம் கொண்டிருந்தும், நேரம் வரும்போது அவை வெறுமையான வாக்குறுதி கொண்ட ஓடுகளாயிருந்தன.

கட்டளை தெளிவாயிருக்கிறது: அந்தகார முறையில் நமக்கென்று செய்வதற்கு ஒன்றுமில்லை. தேவனை பின்பற்றுகிறவர்களாக, நாம் பெற்றுக் கொண்ட வெளிச்சத்திலே தொடர்ந்து நடக்க வேண்டியவர்கள்.

(3) நமக்கு கொடுக்கப்பட்ட கடமை. "... உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள். அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே ..." (5:11-13). அந்தகாரக் கிரியைகளிலிருந்து பின்வாங்கி, நாம் உலகத்தோடு முற்றிலும் விலகினவர்களாக வாழ நம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ளக் கூடாது. மாறாக, உலகத்தின் அந்தகாரத்தின் மேல் நாம் ஒளி வீச வேண்டும். உலகம் இருளுக்குள் மூழ்கியிருப்பதால் எப்படி முறையாக இயங்க வேண்டும் என்று அதற்குத் தெரியாது. நாம் எப்படி மற்றும் ஏன் காரியங்கள் முறையாக இயங்க

*வேண்டிய முறைப்படி இயங்குகிறது என்ற விளக்கத்துடன் நமக்கு கடமை கொடுக்கப்பட்டு, தேவன் தமது சிருஷ்டிகளுக்கு வெளிப்படுத்தின தமது நிறைவான நோக்கத்தை எடுத்துரைக்க வேண்டியவர்கள்.*

*நமது கடமைகளை நிறைவேற்றுவதில் ஜனங்கள் என்ன தவறை செய்கிறார்களென்று அவர்களிடத்தில் பேசுவதையும் உள்ளடக்கியது, ஆனால் அது அவ்வளவு எளிதான காரியமல்ல. யோவான் சொன்னார், "ஒளியானது உலகத்தில் வந்திருக்கிறதும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்கு காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியினிடத்திற்கு வராதிருக்கிறான் ..." (யோவான் 3:19-21).*

*முடிவுரை.* தேவபக்தியற்ற உலகத்திலே தேவனைப் பின்பற்றும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். வெளிச்சம் ஜீவன் ஆகிய இரண்டையும் பற்றி ஒன்றுந் தெரியாத ஜனங்களுக்கு நாம் அவைகளின் முகவர்களாக இருக்கிறோம் என்பது இதன் பொருள். இப்படிச் சொல்லுவதன்மூலம் உன்னை - காட்டிலும் நான் பரிசுத்தவான் என்ற எண்ணத்தை விருத்திபண்ணிக்கொள்ளுவது என்று பொருளல்ல. அதற்கு மாறாக, நாம் அன்பினாலே சத்தியத்தைப் பேசி. ஜனங்கள் மனந்திரும்ப ஏதுவாக அவர்களுடைய பாவங்களை கடிந்து கொள்கிறோம். நாம் அவைகளைச் செய்யும்போது, நாம் உண்மையிலேயே பரலோகத்தி லிருக்கிற பிதாவைப் போலாகிறோம்.

கிறிஸ் புல்லார்ட்

---

குறிப்புகள்

[1]Andrew T. Lincoln, *Ephesians,* Word Biblical Commentary, vol. 42 (Dallas: Word Books, 1990), 326. [2]*ஏசாயா 9:2; 60:1, 2; யோவான் 1:4-9; 3:19-21; 8:12; 9:5; 12:35-46; 1 யோவான் 1:5; 2:8.* [3]Ethelbert W. Bullinger, *A Critical Lexicon and Concordance to the English and Greek New Testament* (London: Samuel Bagster and Sons, n.d.; reprint, Grand Rapids, Mich.: Zondervan Publishing House, Regency Reference Library, 1975), 338. [4]Spiros Zodhiates, ed., *The Complete Word Study New Testament,* 2d ed. (Chattanooga, Tenn.: AMG Publishers, 1991), 884, 904. [5]Lincoln, 328. [6]Zodhiates, 906. [7]Lincoln, 329. [8]Ibid., 330. [9]S. D. F. Salmond, "The Epistle to the Ephesians," in *The Expositor's Greek Testament,* ed. W. Robertson Nicoll (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1967), 3:358. [10]Ibid., 360. [11]Lincoln, 335. [12]*காண்க ஏசாயா 9:2; 10:17; 42:6, 7, 16; 47:5; 60:1-3,* தேவனுடைய இரட்சிப்பு மற்றும் நியாயத்தீர்ப்பு குறித்த பழைய ஏற்பாட்டு வேறுபாடுகள். *காண்க நடபடிகள் 26:18; கொலோசெயர் 1:12, 13; 1 பேதுரு 2:9, 10* தேவனுடைய வல்லமையும் சாத்தானுடைய வல்லமையும் மற்றும் தேவனுடைய ஜனங்களுக்கும் அவருடையவர்களல்லாதவர்களுக்கும் உள்ள புதிய ஏற்பாட்டு வேறுபாடுகள்.